**செய்தி வெளியீடு எண்: 732** **நாள்: 11.10.2018**

## செய்தி வெளியீடு

2018–ம் ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்துத்துறை மூலம் செயல்படுத்த இருக்கும் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பு பேருந்துகள் இயக்கம் குறித்த ஆலோசனைக் கூட்டம் **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்கள் தலைமையில் 10/10/2018 அன்று தலைமைச் செயலக கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், திரு.பி.டபுள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை ஆணையர் திரு.சி.சமயமூர்த்தி,இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை துணைச் செயலாளர் திரு.பி.பிரபாகர், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.ப.பொன்னையா,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் துறை துணைச் செயலாளர், போக்குவரத்துத் துறை இணை ஆணையர்கள், சென்னை மாநகர காவல் துறை இணை ஆணையர் திரு.துரை,இ.கா.ப., மற்றும் காவல் துறை துணை ஆணையர் திரு.சுரேந்திரன், காவல் துறை துணை கண்காணிப்பாளர்கள் (காஞ்சிபுரம் / வண்டலூர்), செங்கல்பட்டு துணை ஆட்சியர், தாம்பரம் மற்றும் பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர், சென்னை மாநகராட்சி அலுவலர்கள், NHAI பொது மேலாளர், அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், போக்குவரத்துத் துறை தலைவர் அலுவலக அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த வருட தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 15/10/2017 முதல் 17/10/2017 வரை கோயம்பேடு, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம், அண்ணாநகர் மேற்கு மாநகரப் பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி பேருந்து நிலையம், சைதாப்பேட்டை நீதிமன்ற பேருந்து நிறுத்தம் ஆகிய ஐந்து இடங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,275 பேருந்துகளுடன் 4,510 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டன. இவற்றில், 5,52,624 பயணிகள் பயணம் செய்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் (CMBT) கோயம்பேடு, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம், தாம்பரம் இரயில்நிலைய பேருந்து நிறுத்தம், மாதவரம் புதிய பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி

பேருந்து நிலையம் மற்றும் மாநகரப் போக்குவரத்துக் கழக கே.கே. நகர் பேருந்து நிலையம் ஆகிய 6 இடங்களிலிருந்தும் வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 03/11/2018 முதல் 05/11/2018 வரையில் மேற்கூறிய இடங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,275 பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகளாக 4,542 பேருந்துகள் என மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, சென்னையிலிருந்து 11,367 பேருந்துகளும் இயக்கப்படும். பிற ஊர்களிலிருந்து மேற்படி மூன்று நாட்களுக்கு 9200 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. தீபாவளி பண்டிகை முடிந்து பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு 07/11/2018 முதல் 10/11/2018 வரை 4207 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். மேலும் தீபாவளி பண்டிகை முடிந்து பிற முக்கிய பகுதிகளிலிருந்து பல்வேறு பகுதிகளுக்கு 7635 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

பொது மக்களின் வசதிக்காக **சென்னை கோயம்பேடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில்–26 சிறப்பு முன்பதிவு கவுண்டர்களும், MEPZ (தாம்பரம் சானிடோரியத்தில்)–2 சிறப்பு முன்பதிவு கவுண்டர்களும், பூவிருந்தவல்லி பேருந்து நிலையத்தில் ஒரு சிறப்பு முன்பதிவு கவுண்டரும், மாதவரம் புதிய பேருந்து நிலையத்தில் ஒரு சிறப்பு முன்பதிவு கவுண்டரும் ஆக மொத்தம் 30 சிறப்பு முன்பதிவு கவுண்டர்கள்** அமைக்கப்படும். இந்த சிறப்பு முன்பதிவு கவுண்டர்கள் வரும் **01/11/2018** முதல் **05/11/2018** வரை செயல்பாட்டில் இருக்கும்.

கடந்த 2017–ம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது 2,90,895 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் செய்தனர். தற்பொழுது 30,274 பயணிகள் முன்பதிவு செய்துள்ளனர். முன்பதிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**போக்குவரத்துத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**